திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக் கட்டிடம் இடிந்து விழும்தறுவாயில் இருக்கின்றது என்று அரசுக்குத் தெரிவித்து 10 மாதங்கள் ஆகிவிட்டன. இன்றுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. வருகின்ற ஜூன் மாதத்திலே பள்ளிக்கூடம் ஆரம்பித்துவிடும். ஆகவே, உடனடியாக மாற்று இடவசதியைச் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று நான் பதில் சொல்லி இருக்கிறேன். நடவடிக்கை எடுத்து பள்ளி நடக்கின்ற அளவுக்குக் கல்வித்துறை பார்த்துக்கொள்ளும்.

கோவை மாவட்டத்திலுள்ள முதியோர் கல்வி நிலையங்கள்

*வினா எண் 1953- திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் முதியோர் கல்வி நிலையம் எத்தனை உள்ளது?

(ஆ) எவ்வளவு பேர் கல்வி கற்று வருகிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) 647 மையங்கள்

(ஆ) 18,564 பேர்

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இந்த முதியோர் கல்வித் திட்டத்திற்காக மத்திய அரசு கொடுத்து வந்த உதவி தற்போது நிறுத்தி விடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றதே, அது உண்மையா? அப்படியானால் அதை மீண்டும் பெற அரசு என்ன முயற்சி எடுத்து வருகின்றது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்கள் செய்து வந்த உதவியைப் பற்றி புதிய அரசு ஏற்பட்டதற்குப் பிறகு அவர்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். மறுபடியும் தருவதாக அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி அவர்கள் முடிவு எடுத்து அந்தப் பணத்தைத் தருவதற்கான வாய்ப்புக்கள் கூடிய விரைவிலே ஏற்படும்.

திரு. ஏ. டி. கருப்பையா : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே முதியோர் கல்வி நிலையங்கள் எத்தனை உள்ளன அங்கே எத்தனை முதியோர்கள் கல்வி கற்று வருகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 647 மையங்கள். அதிலே படிப்பவர்கள் 18,564 பேர்.

1981 மே 13]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, 600-க்கு மேற்பட்ட மையங்களிலே முதியோர்கள் கல்வி கற்று வருகின்றனர் என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஊராட்சி நிறுவனங்கள், பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சிகள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்கள் அப்படிப்பட்ட மையங்களை நடத்தி வருகிறார்களா? அல்லது சமுதாய சேவை செய்யக்கூடிய ஸ்தாபனங்கள் மட்டும் அதை நடத்தி வருகிறார்களா? சமுதாய சேவை செய்யக்கூடியவர்கள் அப்படி நடத்துவதற்கு முன்வந்தால் அவர்களுக்குத் தகுந்த உதவி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்நாடு முழுவதும் 61 ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 100 மையங்கள் வீதம் 6100 மையங்கள் சென்ற ஆண்டு நடைபெற்று இருக்கின்றன. தனிப்பட்ட தொண்டு நிறுவனங்கள் நடத்துகின்ற பள்ளிகளைப் பொறுத்தவரையில் முதியோர்கள் அந்தப் பள்ளிகளுக்கு வந்து படிக்கின்ற அளவுக்கு நடத்துவது அல்லது முதியோர்கள் இருக்கின்ற இடங்களுக்கே சென்று சொல்லித் தருவது போன்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆனால் அரசின் சார்பிலே நடத்துவதைப் பொறுத்த வரையிலே பெருமளவுக்குத் தோல்வி ஏற்பட்டு வருகின்றது என்பதை நாம் அனுபவத்திலே பார்க்கிறோம். தொண்டுள்ளமும் சேவை மனப்பான்மையும் உள்ளவர்கள் அதிலே பங்கெடுத்துக்கொண்டு செய்வார்களேயானால் அது ஓரளவுக்கு வெற்றி அடையும் என்பதை நாம் அனுபவத்திலே பார்த்து வருகிறோம். ஆகவேதான் தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு முக்கியத்துவத்தை இந்தத் திட்டத்திலே தருகிறோம். அப்படித் தருகின்றபோது தவறான காரியங்களுக்கு இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி விடக்கூடாது என்பதற்காக நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறோம்.

தோல் ஏற்றுமதி கழகம்

*வினா எண். 1061- திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோல் ஏற்றுமதி சென்டர் கான்பூருக்கு மாற்றப்பட்டது உண்மையா?

(ஆ) சென்னையிலிருந்து ஏற்றுமதி செய்யும் சென்டரை உருவாக்க தமிழ்நாடு அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:—

(அ) மற்றும் (ஆ) 1956ம் ஆண்டில் சென்னையில் முதல் முதலாக தோல் ஏற்றுமதி முன்னேற்றக் கழகம் நிறுவப்பட்டு தொடர்ந்து இயங்கி வருகிறது. பிறகு 1962-63-ல் தோல் மற்றும் தோல் பொருள்கள் ஏற்றுமதி முன்னேற்றக்கழகம் கான்பூரில் நிறுவப்பட்டது. இந்த இரண்டுக்கழகங்களின் பணிகள் வெவ்வேறு. இது தவிர, தோல் தொழில் முன்னேற்றப் பணிகளை முன்பு ஆக்ராவிலும், தற்போது டில்லியிலும் உள்ள பாரத் லெதர் கார்ப்பரேஷன் கவனித்து வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS